# சாகுபடி பரப்பளவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பு!

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலுரை**
9 ஆம் பக்கத் தொடர்ச்சி

சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வேளாண் பணிகளுக்கு இ-வாடகை செயலி வாயிலாக, குறைந்த வாடகைக்கு 344 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நீக்கவும், உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விரைந்து வழங்கிடவும், 2025-26 ஆம் ஆண்டில், சேலத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை வளாகத்தில் வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்க

## சிறுதானியங்கள் - நிலக்கடலை - பலா - விற்பனை, ஏற்றுமதியை அதிகரித்திட நடவடிக்கை!

மையம் புதியதாக அமைத்திட 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் சுமார் 10,000 விவசாயிகள் பயன்பெறுவர்.

**13. சிறுதானியங்கள், நிலக்கடலை, பலா ஆகியவற்றின் விற்பனை, ஏற்றுமதியை அதிகரித்திட விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி தொடர்பான பயிற்சி மற்றும் வர்த்தக இணைப்புக் கூட்டம் நடத்தப்படும்**

விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு சிறுதானியங்கள், நிலக்கடலை, பலா ஆகிய பயிர்களில் ஏற்றுமதி தொடர்பான பயிற்சியும், உற்பத்தியாளர்கள்-வர்த்தகர்கள் இணைப்பு கூட்டமும்

2025-26 ஆம் ஆண்டில் ஒன்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும். இதன்வாயிலாக வேளாண் விளைபொருள்களின் ஏற்றுமதியும் பிற விற்பனை வாய்ப்புகளும் அதிகரிக்கப்படும்.

**14. விவசாயிகளுக்குத் தரமான சான்று பெற்ற விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்ய ஒருங்கிணைந்த தரக்கட்டுப்பாடு பிரிவு ஏற்படுத்தப்படும்**

தமிழ்நாட்டில் 12,671 விதை விற்பனை நிலையங்களும், 15,940 உர விற்பனை நிலையங்களும், 8,290 பூச்சிக்கொல்லி மருந்துகள் விற்பனை நிலையங்களும் என மொத்தம் 36,901 விற்பனை உரிமங்கள் பெற்றுள்ள வேளாண் இடுபொருள் விற்பனை நிலையங்கள் உள்ளன. இவற்றின் வாயிலாக விற்கப்படும் விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் தரத்தினை ஆய்வு செய்து, விவசாயிகளுக்குத் தரமான வேளாண் இடுபொருட்கள் கிடைப்பதனை உறுதி செய்திடும் வகையில் 2025-26 ஆம் ஆண்டில் "ஒருங்கிணைந்த தரக்கட்டுப்பாடு பிரிவு" உருவாக்கப்படும்.

**15. தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் தென்னையில் உற்பத்தித்திறனை அதிகரித்தல் குறித்து 1,000 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்படும்**

தென்னை சாகுபடியில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தென்னையினை அதிக பரப்பளவில் முறையான பராமரிப்புடன் சாகுபடி செய்யும் விவசாயிகள், தென்னை நாற்றுப் பண்ணை நிறுவி, தேவையின் அடிப்படையில் தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதன் வாயிலாகக் கூடுதல் வருமானம் பெற இயலும். எனவே, 2025-26 ஆம் ஆண்டில், தென்னை பெருமளவில் பயிரிடப்படும் மாவட்டங்களில் இருந்து 1,000 தென்னை விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு அரசு தென்னை நாற்றுப் பண்ணைகளில் ஒரு நாள் பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சியில், பகுதிக்கு ஏற்ற இரகங்கள், தாய் மரங்கள், தரமான நெற்றுகள் ஆகியவற்றைத் தேர்வு செய்தல், நெற்றுகளைப் பதனிடும் வழிமுறைகள், நாற்றங்கால் அமைத்தல், நாற்று உற்பத்தியில் உர, நோய், பூச்சி மேலாண்மை மற்றும் தென்னையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல் குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.

**16. மா மரங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, மா விவசாயிகள் பயன்பெறும் வகையில், மா மரங்களில் கவாத்து செய்வது குறித்த செயல் விளக்க விழிப்புணர்வுப் பயிற்சி 500 விவசாயிகளுக்கு அளிக்கப்படும்**

தமிழ்நாட்டில் 1.46 இலட்சம் எக்டரில் மா சாகுபடி செய்யப்படுகிறது. மா மரங்களில் அதிக மகசூல் பெற, அறுவடைக் காலம் முடிந்தவுடன் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் கவாத்து செய்தல் அவசியம். கவாத்து மேற்கொள்வதன்மூலம் புதுத்தளிர்கள் உருவாகி காய்க்கும் கிளைகளின் எண்ணிக்கை அதிகமாவதால் மா உற்பத்தித்திறன் உயர்கிறது. மேலும், தரமான பழங்கள் கிடைப்பதுடன், பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களும் குறையும். எனவே, 2025-26 ஆம் ஆண்டில், மா பயிரிடும் விவசாயிகள் முறையாக் கவாத்து மேற்கொள்ள ஏதுவாக, கிராம அளவில் விவசாயிகளின் தோட்டங்களிலேயே 500 விவசாயிகளுக்கு நேரடி செயல்விளக்கப் பயிற்சி வழங்கப்படும்.

**17. தோட்டக்கலைப் பயிர்கள், மலைப் பயிர்களில் சாகுபடி, மதிப்புக் கூட்டுதல் தொழில்நுட்பங்கள், சந்தை வாய்ப்புகள் குறித்த விபரங்கள் சமூக ஊடகங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்**

இளைஞர்களைத் தோட்டக்கலையில் அதிக அளவில் ஈடுபடுத்தும் நோக்குடனும், தோட்டக்கலை சார்ந்த தொழில்களில் ஆர்வத்தைத் தூண்டவும், தோட்டக்கலைத் திட்ட செயல்பாட்டாளர்கள், சாதனையாளர்கள், வெற்றிகரமான விவசாயிகளின் அனுபவக் கதைகள், தொழில்நுட்பங்கள் போன்ற தகவல்கள் வீடியோ காட்சிகள், புகைப்படங்கள் வாயிலாக சமூக ஊடகங்கள் [Facebook, Instagram, YouTube, WhatsApp மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் வலைத்தளம் (Website)]மூலம் 2025-26 ஆம் ஆண்டிலிருந்து பகிரப்படும். இதன் மூலம், இளைஞர்களிடையே குறைந்த பரப்பில் அதிக வருமானம், உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகள், உயிர்ம வேளாண்மையின் முக்கியத்துவம், மண் வள மேம்பாடு குறித்து முழுமையான விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை தோட்டக்கலைப் பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக்கூட்டுதலில் ஈடுபட ஊக்குவிக்கப்படும். மேலும், திட்ட நிதி உதவிகள், பயிற்சிகள், தொழில் வாய்ப்புகள், சந்தை வாய்ப்புகள், சந்தை விலை விபரங்கள் ஆகியவையும் தொடர்ந்து பகிரப்படும்.

**18. உழவர்கள், கிராமப்புர இளைஞர்கள் மற்றும் பெண்கள் என 1,000 நபர்கள் பயன்பெறும் வகையில் வேளாண்பொருட்கள் மதிப்புக் கூட்டும் இயந்திரம் இயக்கவும், பராமரிக்கவும் பயிற்சிகள் அளிக்கப்படும்**

வேளாண்பொருட்கள் மதிப்புக்கூட்டும் இயந்திரங்களைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திட, 2025-26 ஆம் ஆண்டில், ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மைப் பொறியியல் துறையும், வேளாண் அறிவியல் நிலையங்களும் இணைந்து விவசாயிகள், கிராமப்புர இளைஞர்கள், பெண்கள் உள்ளிட்ட 1,000 நபர்களுக்கு மதிப்புக் கூட்டும் இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும் பயிற்சிகள் வழங்கப்படும்.

இதன்மூலம், விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுவதோடு, வேளாண் பொருட்கள் மதிப்புக்கூட்டும் இயந்திரங்களின் பராமரிப்புச் செலவுகள் குறைந்து அவற்றின் வேலைத்திறனும், ஆயுட்காலமும் மேம்படுத்தப்பட்டு, விவசாயிகளின் நிகர வருமானம் அதிகரிக்க வழிவகைகள் ஏற்படுத்தப்படும்.

**19. சென்னை மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையத்தில் தொழில் முனைவோர் வாய்ப்புகளுக்கான வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் குறித்து 500 படித்த இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும்**

சென்னையில் அமைந்துள்ள மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையத்தில், வேளாண்மைப் பொறியியல் துறையினால், வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தொழில்முனைவோராக உருவாக்குவதற்கான ஐந்து நாள் பயிற்சி 500 படித்த இளைஞர்களுக்கு 2025-26 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சியானது மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள், வேளாண்மையில் ஆர்வமுடையவர்களுக்கு வேளாண் தொழில் முனைவு குறித்த தெளிவான புரிதலை வழங்குவதுடன், அவர்களின் தொழில்முனைவுத் திறனை மேம்படுத்துவதோடு, தற்போதைய சந்தைப் போக்குகளுக்கேற்ப சுயமாக வேளாண் தொழில் தொடங்குவதை வழிகாட்டுவதாக அமையும்.

**20. வேளாண் இயந்திரங்களைப் பயன்படுத்தும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறையால் வேளாண் இயந்திர உற்பத்தி நிறுவனங்களுடன் இணைந்து வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு குறித்தான முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும்**

## 12 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி!

டிராக்டர்கள், நெல் அறுவடை இயந்திரங்கள், கரும்பு அறுவடை இயந்திரங்கள், பவர் டில்லர்கள் போன்ற வேளாண் இயந்திரங்களும், விசை களையெடுக்கும் கருவி, ரோட்டவேட்டர், இதர உழவுக் கருவிகளும் விவசாயிகளால் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. இவ்வேளாண் இயந்திரங்கள், கருவிகளைப் பராமரிக்கும் முறைகளைப் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளித்திட வேளாண் இயந்திர உற்பத்தி நிறுவனங்களோடு ஒருங்கிணைந்து வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் 2025-26 ஆம் ஆண்டில் மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் 37 மாவட்ட அளவிலான முகாம்கள் நடத்தப்படும்.

**21. புதியதாகக் கண்டுபிடிக்கப்படும் நவீன வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்திட 50 செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்படும்**

இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தனியார் வேளாண் இயந்திர உற்பத்தியாளர்கள், புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளும் விவசாயிகள் போன்றோர்களால் புதியதாக உருவாக்கப்படுகின்ற வேளாண் இயந்திரங்களையும், வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களையும் வேளாண் பெருமக்களிடையே பிரபலப்படுத்திடும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் 2025-26 ஆம் ஆண்டில், 50 செயல்விளக்கங்கள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் 1,000 விவசாயிகள் நேரடியாகப் பயன்பெறுவர்.

**22. 1,500 விவசாயிகள் பயன்பெறும் வகையில், நுண்ணீர்ப் பாசன அமைப்புகளின் பராமரிப்பு குறித்த செயல் விளக்கப் பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்**

நுண்ணீர்ப் பாசன அமைப்புகளைச் சரிவரப் பராமரிப்பதால் மட்டுமே அவற்றின் சீரான செயல்பாட்டினை உறுதி செய்து பாசனநீரின் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்க இயலும். எனவே, 2025-26 ஆம் ஆண்டில், 1,500 விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, நுண்ணீர்ப் பாசன நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து சொட்டு நீர், தெளிப்பு நீர்ப்பாசன அமைப்புகளைப் பராமரிப்பது குறித்த 50 செயல் விளக்கங்கள் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும்.

**கூடுதலாக 3 அறிவிப்புகள்.**

பெஞ்சல் புயலில் சேதமடைந்த விழுப்புரம் மாவட்டம் அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு உழவர் ஓய்வுக்கூடம் மற்றும் சுற்றுச் சுவர் ரூ.1.50 கோடி மதிப்பில் கட்டப்படும்.

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 80 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கான வரைவு கொள்கை விரைவில் வெளியிடப்படும். இந்தக் கொள்கையானது உழவர் பெருமக்களுக்கும், கிராமப்புற இளைஞர்களுக்கும் உதவும் வகையிலும் சிறு, குறு மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிலை ஊக்குவிக்கவும், விவசாயப் பொருட்கள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் இக்கொள்கையில் வழிவகை செய்யப்படும்.

**கீழ்பெண்ணாத்தூரில் குளிர்பதன சேமிப்பு கிடங்கு!**

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி தூரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நாயுடுமங்கலம் ஊராட்சியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் குளிர்பதன சேமிப்பு கிடங்கு அமைக்கப்படும்.

இந்த அறிவிப்புகளை ஏற்றுக்கொண்டு வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

அதைப்போல, இந்த பட்ஜெட் பெரிய வேலை அதையெல்லாம் இங்கே வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உதவி புரிந்த தலைமைச் செயலாளர் என். முருகானந்தம், அவர்களுக்கும், அதேபோல, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.உமாநாத், அவர்களுக்கும், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் எம்.எஸ்.சண்முகம் அவர்களுக்கும், முதலமைச்சரின் தனிச் செயலாளர் தினேஷ் குமார் அவர்களுக்கும், அரசு முதன்மைச் செயலாளர் நிதித் துறை த. உதயசந்திரன், அவர்களுக்கும், அதேபோல, அருண் தயாள், அவர்களுக்கும், முதலமைச்சரின் இணை செயலாளர் லட்சுமிபதி அவர்களுக்கும், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் தட்சிணாமூர்த்தி அவர்களுக்கும், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை முதன்மைச் செயலாளர் ஆப்ரகாம், அவர்களுக்கும், சர்க்கரைத் துறை இயக்குனர் அன்பழகன் அவர்களுக்கும், அதே வேளாண் துறை இயக்குநர் முருகேஷ் அவர்களுக்கும், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன் அவர்களுக்கும், தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைத் திட்ட இயக்குநர் மகாபாரதி அவர்களுக்கும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் (பொறுப்பு) முனைவர் தமிழ் வேந்தன் அவர்களுக்கும், வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் டாக்டர் முருகேசன் அவர்களுக்கும், வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் சந்திரசேகர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றிகூறி விடைபெறுகிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் எம்ஆர்.கே. பன்னீர்செல்வம் பதிலுரை வழங்கினார்.

---

## திருச்சியில் காமராசர் பெயரில் நூலகம் – சென்னையில் காரல் மார்க்சுக்குச் சிலை! முதலமைச்சரின் அறிவிப்பு பாராட்டத்தக்கது!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



*சென்னை, ஏப். 4-*

திருச்சியில் காமராசர் பெயரில் நூலகம் - தலைநகர் சென்னையில் காரல் மார்க்சுக்குச் சிலை அமைக்கப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்பு பாராட்டத்தக்கது என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் அறிக்கை விடுத்துள்ளார்.

நேற்று (3.4.2025) தமிழ்நாடு சட்டப்பேரவையில் 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் (விதி 110-இன்கீழ்) வெளியிட்ட அறிக்கையில், பொருளாதார தத்துவ கர்த்தாவான காரல் மார்க்சுக்கு சென்னை தலை நகரில் சிலை எழுப்பப்படும் என்றுள்ள இனிய அறிவிப்பை வரவேற்றுப் பாராட்டி மகிழ்கிறோம்.

'திராவிட மாடல்' ஆட்சியின் சிறப்பம்சங்கள்!

நமது 'திராவிட மாடல்' ஆட்சி தத்துவத் தலை வர்களையும், தொண்டறச் செம்மல்களையும் வருகின்ற தலைமுறைகளுக்கு நினைவூட்டி, வரலாற்றில் பெருமைப்படுத்துவது மிகவும் சிறப்பான 'திராவிட மாடல்' ஆட்சியின் சிறப்பம்சங்களாகும்!

காரல் மார்க்ஸ்பற்றி வெகுமக்களிடையே தந்தை பெரியாரும், அவரது சுயமரியாதை இயக்கமும், அவர் நடத்திய 'குடி அரசு', 'விடுதலை' ஏடுகளும் அவரது விஞ்ஞான சோஷலிசத்தை மக்களுக்கு விளக்கியதோடு, பல குழந்தைகளுக்குக் காரல் மார்க்ஸ் என்றே பெயரிட்டதுண்டு; அவர்களுக்கு இப்போது 90 வயதும் ஆகின்றது.

எனவே, 'திராவிட மாடல்' ஆட்சியின் மாட்சியில், இது முக்கிய சாதனையாகும்!

பாராட்டி வரவேற்க வேண்டிய ஒன்று!

அதுபோலவே, திருச்சியில் 290 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கும் நூலகத்திற்குக் கல்வி வள்ளல் காமராசர் பெயர் வைக்கப்படும் என்று அறிவிப்புத் தந்ததும் மிகவும் பாராட்டி வரவேற்கவேண்டிய ஒன்றாகும்!

நாளும் இப்படி சாதனைக்குமேல் சாதனை செய்து, வரலாற்றில் பொன்னேடுகளைப் பெருக்கிக் கொண்டே போவதால், கொள்கை எதிரிகளோ பொறுத்துக் கொள்ள முடியாமல், வெட்டி அவதூறுச் சேற்றினை ஆதாரமின்றி வீசுகின்றனர்.

பெரியார் மண் அவர்களை நன்கு புரிந்தே வைக்கவேண்டிய இடத்தில் வைத்திருக்கிறது!

முதலமைச்சர் அவர்களுக்கு நமது பாராட்டுகள்!

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

---

## மயிலம் ஒன்றியம் ரெட்டனையில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு - சீர்வரிசை பொருட்கள்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

*மைலம், ஏப். 4 -*

மயிலம் ஒன்றியம் ரெட்டனையில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்ட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

விழுப்புரம் மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள் சார்பில் மைலம் வட்டாரத்தைச் சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா ரெட்டனையில் நடைபெற்றது.

---




மேயர் ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு நேற்று (03.04.2025) தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் அடையாள அட்டைகளை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய முதன்மைச் செயல் அலுவலர் கு. கோவிந்தராஜ், (ஓய்வு), வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, தாட்கோ பொது மேலாளர் ந.சீனிவாசன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய துணைத் தலைவர் செ.கனிமொழி பத்மநாபன், உறுப்பினர்கள் சி.சீனிவாசன், ஜி.கே.ராஜன் (எ) கோவிந்தராஜன், அரிஷ் குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## சென்னை மாநகராட்சி
## தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள் குறித்த தகவல் கையேடு!

### மேயர் ஆர்.பிரியா வெளியிட்டு – நல வாரிய அடையாள அட்டை வழங்கினார்!

*சென்னை, ஏப்.04-*

மேயர் ஆர்.பிரியா நேற்று (03.04.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள் குறித்த தகவல் கையேட்டினை வெளியிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் அடையாள அட்டைகளை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை மாவட்டத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்து அதன் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடைந்திட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் கையேடு வெளியிடப் பட்டது. இந்த கையேடு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை மாவட்டத்தில் அனைத்து இடங்களில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும்.

தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் (NMR), சுய உதவிக் குழு தூய்மைப் பணியாளர்கள் (NULM Conservancy Workers), வெளிநிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களில் (Outsourcing Conservancy Workers) 17,659 தூய்மைப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய அடையாள அட்டைகள் வழங்குவதன் அடையாளமாக, முதற் கட்டமாக 300 பணியாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய முதன்மைச் செயல் அலுவலர் கு. கோவிந்தராஜ், (ஓய்வு), வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, தாட்கோ பொது மேலாளர் ந.சீனிவாசன், மேலாளர் திருமதி இந்திரா, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய துணைத் தலைவர் திருமதி செ.கனிமொழி பத்மநாபன், உறுப்பினர்கள் சி.சீனிவாசன், ஜி.கே.ராஜன் (எ) கோவிந்தராஜன், அரிஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூய்மைப் பணியாளர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டினை கருத்தில் கொண்டு, மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் 2007-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த வாரியத்தின் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் 2008-ஆம் ஆண்டு முதல் வழங்கிட வழிவகை செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் நலன் கருதி அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு வழங்கப்படும் உதவித்தொகையினை மற்ற நல வாரியங்களில் வழங்கப்படுகின்ற உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி உத்தரவிட்டு அதன்படி நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 3,959 பேர் நிரந்தர தூய்மைப் பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் தவிர்த்து 420 தினக்கூலி தூய்மைப் பணியாளர்கள் (NMR) 4,990 சுய உதவிக்குழு பணியாளர்கள், தனியார் நிறுவனமான ராம்கி நிறுவனத்தை சேர்ந்தவர்கள் 2,603 பேர் மற்றும் உர்பேசர் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் 9,646 பேர் என மொத்தம் 17,659 தூய்மைப் பணியாளர்கள் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் திட்டங்களால் பயனடைவார்கள்.

விபத்து காப்பீட்டு திட்டத்தின் வாயிலாக, விபத்தில் மரணமடைவோருக்கு, தலா ரூ.5,00,000/- (ஐந்து இலட்சம்), உறுப்புகளை இழந்தால் காயங்கள் ஏற்பட்டு இயலாமையில் உள்ளோருக்கு ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) மற்றும் இயற்கை மரண உதவித் தொகை ரூ.20,000/-, ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.5,000/- முதியோர் ஓய்வூதியம் (தலா ரூ.1,000/-) திருமண உதவித்தொகை (தொழிலாளர் மகன்/மகள்) பெண்களுக்கு ரூ.5,000/- ஆண்களுக்கு ரூ.3,000/- என்ற அளவில் தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கல்வி உதவித் தொகை என்ற முறையில் 10, 11, 12 ஆம் வகுப்பு பயிலும் பெண்களுக்கும், அதே வகுப்புகள் படித்து முடித்த இருபாலருக்கும், முறையான பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழில் நுட்ப பாலிடெக்னிக் படிப்பு, ஐ.டி.ஐ படிப்பு போன்றவற்றிற்கும் இப்படிப்புகள் விடுதியில் தங்கி படிப்போருக்கும் பல்வேறு வழிகளில் உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன் பெண்களுக்கு மகப்பேறு உதவித் தொகைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், முறையான மற்றும் முறைசாரா கழிவுநீர் சார்ந்த பணிகளில் நேரடியாக ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களுக்கு (Core Sanitation Workers) சமூக கழிப்பிடங்கள் (CT) மற்றும் பொது கழிப்பிடங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் (PT), மழை நீர் வடிகால் சுத்தம் செய்பவர்கள் கழிவுநீர்த் தொட்டியை சுத்தம் செய்பவர்கள், இயக்குதல் மற்றும் பராமரித்தல் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் (Feacal Sludge Trealement Plant (FSTP)) / Sewage Treatment Plant (STP) பணிபுரிபவர்களுக்கு தாட்கோ மூலம் தொழில் திறன் பயிற்சி, தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்ட (SWDS) அடையாள அட்டை & திறன் சரிப்பார்ப்பு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் குறைந்தபட்ச ஊதியம் ஊறுதி செய்தல், சமூகப் பாதுகாப்பு தொடர்பு & வாழ்வாதார ஆதரவுத் திட்டங்கள் போன்ற சிறப்பு சலுகைகள் கூடுதலாக தாட்கோ மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக, தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் அடையாளம் காணப்பட்ட சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து தூய்மைப் பணியாளர்களையும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் (TNCWWB) சேர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 17,659 முக்கிய தூய்மைப் பணியாளர்கள் (CSWs) அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில், 8,765 CSW தகவல்கள் TNCWWB போர்ட்டலில் பதிவு செய்யப்பட்டுள்ளன, மேலும் 8,493 விண்ணப்பங்கள் TAHDCO ஆல் அங்கீகரிக்கப்பட்டு அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. மீதமுள்ள நபர்களுக்கும் தகவல் பதிவு செய்து உறுப்பினர்களாக சேர்வதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.